# தெஹியோவிட்ட பிரதேச சபை

## கேகாலை மாவட்டம்

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மே 04 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 01 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஜூலி 14 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் தொடக்க திகதியில் பெறப்பட வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா.6,640,659 ஆக இருப்பினும் ரூபா.7,697,925 வாக கணக்கீடு செய்யப்பட்டிருப்பதால் 2016 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு வருமானக் கடன்பட்டோர் மற்றும் திரண்ட நிதிக் கணக்குகளின் மீதி ரூபா.1,057,266 வினால் அதிகரித்துக் காணப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் 11 நிதிப்பாய்சல் நடவடிக்கைகள் மூலம் கிடைத்திருந்த ரூபா.128,170,707 மற்றும் கிடைக்க வேண்டிய மூலதன நன்கொடை ரூபா.4,199,637 வினை மூலதன நன்கொடை பெறப்பட்ட வைப்பு மற்றும் கொடுப்பனவு வைப்புக் கணக்குளில் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததால் மீளாய்வாண்டின் மூலதன நன்கொடை மற்றும் மூலதனச் செலவு ரூபா.132,370,344 குறைந்தும் 2016 திசெம்பர் 31 திகதிக்கு வேலை கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் ரூபா. 4,199,637 குறைத்தும் காட்டப்பட்டிருந்தது.

(எ) முத்தரைக்கட்டண உப அட்டவனை தயாரிப்பதற்காக 2015 ஆம் வருடத்திற்குரிய 1,001 அலகிற்காக ரூபா.100,100 மற்றும் மீளாய்வாண்டின் 06 மாதத்திற்குரிய 629 அலகிற்காக ரூபா.62,900 தொடர்பாக கடன்கொடுத்தோர் ஒதுக்கீடு செய்திருக்காததால் கடன்கொடுத்தோர் ரூபா.163,000 குறைந்தும் திரண்ட நிதிக் கணக்கு மீதி ரூபா.100,100 வும் வருடத்தின் மிகை ரூபா.62,900 குறைத்தும் காட்டப்பட்டிருந்தது.

(ஏ) 2015 வருடத்திற்குரிய கணக்காய்வுக் கட்டணம் தொடர்பாக மிகை ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா.29,366 வினை தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளாததனால் 2016 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு கடன்கொடுத்தோர் மீதி ரூபா.29,366 வினால் அதிகரித்தும் மற்றும் திரண்ட நிதிக் கணக்கு மீதி அப்பெறுமதியினால் குறைந்தும் காணப்பட்டது.

(இ) தல்துவ பொதுச் சந்தை தொடர் நிர்மானிப்பதற்காக தேசிய கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்ட கடன் தொடர்பாக 2015 ஜுன் மாதத்திலிருந்து திசெம்பர் மாதம் வரையான காலப்பகுதிக்குரிய மீளாய்வாண்டினுல் செலுத்தப்பட்ட வட்டி ரூபா.131,250 வை மீளாய்வாண்டின் செலவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததால் வருடத்தின் மிகை ரூபா.131,250 குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.

1.3.2 <u>இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்</u>

02 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா. 3,570,333 ஆக இருந்ததுடன் அதற்குரிய உபயோகப் பதிவேடுகளின் பிரகாரம் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா. 1,439,519 ஆனமையால் ரூபா. 2,130,814 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

1.3.3 <u>தொங்கல் கணக்கு</u>

2009 ஆண்டு முதல் இருந்து வரும் தொங்கல் கணக்கு செலவு மீதியான ரூபா.4,552 வினைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.4 <u>பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்</u>

<u>பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.</u>

(அ) 2010/2011 வருடத்தில் சேகரிக்கப்பட்ட பெறுமதி சேர்க்கப்பட்ட வரி, தேசத்தை கட்டியெழுப்பும் வரி மற்றும் நிறுத்திவைத்தல் வரிகளின் கூட்டுமொத்தம் ரூபா. 3,015,033 வினை 2017 மே மாதம் 31 ஆம் திகதி வரைக்கும் உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்ருக்கவில்லை.

(ஆ) 1989 மற்றும் 1992 வருடம் முதல் கொண்டுவரப்படுகின்ற நிலுவை கழிவுப் பொருள் வரி, கடை வாடகை மற்றும் தண்டப்பணம், இறைச்சிக்கடை, மீன்கடைகளின் தண்டப்பனம் என்பவற்றின் கூட்டுமொத்தமாக ரூபா.102,679 இனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமல் பெறவேண்டிய மீதியின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

1.3.5 <u>சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மாணங்களுடன் இணங்காமை</u>

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மாணங்களுடன் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1987 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 158(1) பிரிவு | 2016 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு ரூபா. 3,843,403 நிலுவை ஆதன வரி தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| (1)நி.பி.371 (2) ஆ | 03 செயல்நிமித்தம் தொடர்பாக பெறப்பட்ட 11 முற்பணம் ரூபா.220,000 வினை 2016 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை |
| (11) நி.பி.396 (இ) | வழங்கப்பட்டிருந்தும் கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களை விஞ்சிய ரூபா.182,825 கூட்டுத்தொகையான 14 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (iii) நி.பி.571 | 2006 ஆம் வருடத்திலிருந்து 2014 வரையான காலப்பகுதிக்குரிய 400 வைப்புக்களின் கூட்டுத்தொகையான ரூபா.5,873,944 தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (iv) நி.பி.880 முதல் 893 வரை | ஊழியர் பிணை வைக்க வேண்டிய 07 அதிகாரிகளின் ஊழியர் பிணை வைப்புத் தொகையான ரூபா.29,000 பெறப்பட்டிருக்கவில்லை. |
| (v) நி.பி. 1646 | நாளாந்த வாகனங்கள் தொடர்பாக செலுத்தும் குறிப்பு புத்தக சுருக்கம் அடுத்து வரும் மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளரிற்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்தும் சபைக்குரிய 17 வாகனம் தொடர்பாக மாதம் 01 முதல் மாதம் 12 வரையான காலப்பகுதிக்கான செலுத்தும் குறிப்பு கணக்காய்வுக்கு முன்வைக்கவில்லை. |
| (எ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவை XXIV ஆம் அத்தியாயத்தின் 1.6 ஆம் பிரிவு | சபையில் சேவையாற்றி வேலை இடை நிறுத்திற்குட்பட்ட மற்றும் பணியிட மாற்றம் பெற்றுச் சென்ற மூன்று பேரிடமிருந்தும் அறவிடப்பட வேண்டிய ரூபா.75,907 ஊழியர் கடன் மீதியினை அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஏ) சப்ரகமுவ மாகாண சபையின் பிரதான செயளாலரின் 01/2004 இலக்க மற்றும் 2004 ஜனவாரி 26 ஆம் திகதியின் சுற்றுநிருபம் | இரண்டு வெளிக்கல உத்தயோகத்தரினால் 09 மாாதம் தொடர்பாக முன் பணி வேலைத்திட்டம் மற்றும் 11 மாதம் தொடர்பாக பின் பணி வேலைத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (இ) சப்ரகமுவ மாகாண சபையின் பிரதான அமைச்சரவைச் செயளாலரின் 2010 நவம்பர் 16 ஆம் திகதி 10/2010 இலக்க சுற்றுநிருபம் | சாதாரன தற்காலிக, ஒப்பந்த மற்றும் சலுகை அடிப்படையில் பிரதான அமைச்சரவையின் செயளாலரின் அனுமதியின்றி ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள முடியாது இருப்பினும் அனுமதியின்றி 02 பதவிகள் தொடர்பாக இரண்டு ஊழியர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவு

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா. 15,806,397 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா. 13,493,328 ஆக இருந்தமையால் மீளாய்வாண்டின் நிதி விளைவில் ரூபா. 2,313,069 அதிகரிப்பைக் காண்பித்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

நிதி விளைவுகள் ரூபா. 2,313,069 தொகை அதிகரிப்பதற்கு 06 வருமான விடயங்களில் அதிகரிப்பும் 03 செலவின விடயங்களில் வீழ்சியும் பிரமானமாகத் தாக்கமளித்திருந்தன.

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 வருமானம் சேகரித்தலின் செயலாற்றல்

மீளாய்வாண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | | | | | 2016.12.31 இல் நிலுவை | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | 2016.01.01 இல் நிலுவை | 2016.12.31 இல் நிலுவையில் அறவீடு | 2016 ஆம் ஆண்டில் பற்றுச்சீட்டிடல் | ஆண்டின் பற்றுச்சீட்டிடல்களில் அறவீடு | 2016.01.01 இல் காணப்பட்ட மீதி | ஆண்டின் பற்றுச்சீட்டில்களில் நிலுவை | மொத்த நிலுவை |
| | | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| i | ஆதனவரியும் வரியும் | 6,391 | 1,877 | 3,552 | 2,198 | 4,514 | 1,354 | 5,868 |
| ii | வாடகை | 615 | - | 4,302 | 2,868 | 615 | 1,434 | 2,049 |
| iii | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 115 | 16 | 683 | 683 | 99 | - | 99 |
| iv | ஏனைய வருமானம் | 18,301 | 13,533 | 43,793 | 22,738 | 4,768 | 21,055 | 25,823 |
| | மொத்தம் | 25,422 | 15,426 | 52,330 | 28,487 | 9,996 | 23,843 | 33,839 |

### 2.3.2 ஆதனவரி

ஆதன சொத்துக்கள் குறைந்தபடச்சம் 05 வருடத்திற்கு ஒருமுறை மதிப்பீடு செய்து அறவிட வேண்டுமாக இருந்தும் 2008 ஆம் வருடம் செய்யப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் மீளாய்வாண்டிலும் ஆதனவரி அறவிடப்பட்டிருந்தது.

### 2.3.3 வேறு வருமானங்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றது.

(அ) சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம்

2000 ஆம் வருட 53 ஆம் இலக்க மற்றும் 1988 ஆம் வருட 56 இலக்க சட்டத்தின் மூலம் மறுசீரமைக்கப்பட்ட 1980 ஆம் வருட 47 ஆம் இலக்க தேசிய சூற்றாடல் சட்டத்தின் கீழ் பிரசுரிக்கப்பட்ட 1533/16 மற்றும் 2008 ஆம் வருட ஜனவாரி 25 ஆம் திகதி விசேட வர்த்தமானி அறிவிப்பின் படி சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெறவேண்டிய 06 வியாபார நிறுவனங்களினால் சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளாததனால் சபைக்கு வருமானமாக கிடைக்க வேண்டிய ரூபா.24,000 பெறப்படவில்லை.

(ஆ) விளம்பரப் பலகை கட்டணம்

விளம்பர பிரச்சாரப் பலகைக் கட்டணம் அறவிடுவது தொடர்பாக துணைவிதி இயற்றப்பட்டிருக்கவில்லாததிருந்தும் தற்காலிக விளம்பரப் பலகை தொடர்பாக

ரூபா. 10 மற்றும் நிரந்தர விளம்பரப் பலகை தொடர்பாக ரூபா. 50 படியும் கட்டணம் அறவிடப்பட்டிருந்தது.

(எ) காணி விற்பனை மீதான வரி

2015 மற்றும் 2016 வருடங்களில் 05 காணித் துண்டாடல் தொடர்பான விற்பனைக்குரிய மதீப்பீட்டுப் பெறுமதியின் மேல் நூற்றுக்கு 01 வீதக் கட்டணமாக ரூபா. 877,455 வைப்பாக அறவிடப்பட்டிருந்தது இருப்பினும் காணி துண்டாடலின் உண்மையான விற்பனைப் பெறுமதியின் மேல் நூற்றுக்கு 01 வீதத்திற்குரிய சமமான கட்டணம் அறவிடப்பட்டுருக்கவில்லை.

(ஏ) தொலைத் தொடர்பு கோபுரக் கட்டணம்

சபையின் அதிகார எல்லைக்குள் நிர்மானிக்கப்கட்டுள்ள 02 தொலைத் தொடர்பு கோபுரங்களிலிருந்து இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1597/8 இலக்க மற்றும் 2009 ஏப்ரல் 17 ஆம் திகதி விசேட வர்த்தமானி அறிவிப்பின் படி ரூபா.49,000 செயல் முறைக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) வியாபார வரி

சபையின் அதிகார எல்லைக்குள் நடாத்திச்செல்லப்படுகின்ற வியாபார, தொழில் மற்றும் கைத்தொழில் தொடர்பாக ஆய்வு செய்யாது மற்றுமின்றி 08 வியாபார நிலையங்கள் வியாபார வரி செலுத்தாததனால் ரூபா.24,000 சபைக்குரிய வருமானம் கிடைத்திருக்க வில்லை.

2.3.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2016 திசெம்பர் 31 ஆம் திகதியில் கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா.13,095,634 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா.10,200,000 ஆகும்.

3 <u>செயற்பாட்டு மீளாய்வு</u>

3.1 <u>செயற்திறன்</u>

சபைக்குரிய இடுகாடுகள் தொடர்பான விபரங்கள் சபையில் காணப்படாததுடன் நன்கொடை மற்றும் சபைக்கு கையளிக்கப்பட்ட இடங்கள் சட்டரீதியான பத்திரம் முலம் கையேற்கப்பட்டிருக்கவில்லை.

3.2 <u>முகாமைத்துவ செயற்திறனின்மை</u>

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 06 பதவிகள் தொடர்பாக 12 ஊழியர்களின் வெற்றிடங்களும் 03 பதவிகள் தொடர்பாக 06 ஊழியர்களின் உபரியும் காணப்பட்டது.

(ஆ) பயன்படுத்தப்படுகின்ற 15 வாகனம் தொடர்பாக 08 ஓட்டுனர்கள் மாத்திரம் சேவையில் அமர்த்தப்பட்டிருக்கும் காரணத்தால் சபைகுரிய வாகனங்களின் பயன்பாடு குறைவாகக் காணப்பட்டது.

(எ) சபையில் பயன்படுத்தப்படுகின்ற 11 வாகனங்கள் மற்றும் 02 டிரெய்லர்கள் தொடர்பாக சபையின் பெயரில் உரிமை மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுருக்கவில்லை.

(ஏ) தெகியோவிட்ட நகர அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் சபை நிதியத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட டுப்லோ இயந்திரம் தொடர்பாக ரூபா.188,000 காசுப்பதிவேட்டின் குறைபாடு காரணமாக மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சிற்கு மீளலிப்புக்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2015 நகர அபிவிருத்திட்டத்தின் கீழ் பிரதேச சபை மற்றும் பொது வியாபாரச் சந்தையிற்கு CCTV கெமரா பொருத்தப்பட்டதற்காக 2016 ஜனவரி 27 ஆம் திகதி ரூபா.882,900 செலுத்தப்பட்டிருந்தது ஆயினும் அதிலிருந்த குறைபாட்டினை 2017 ஜனவரி வரையிலும் சரி செய்திருக்கவில்லை.

(ஈ) 2017 ஜனவரி 06 ஆம் திகதி மின்சார உபகரணங்கள் மற்றும் பௌதீக இருப்பு பரீட்சிக்கும் போது 04 வகையான பொருட்களில் 14 அலகுகள் குறைந்திருந்ததாக அறிக்கையிடப்பட்டிருந்தது.

3.3 செயற்பாட்டு செயற்திறனின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றக.

(அ) பிரதேச சபை புதிய சந்தைத் தொகுதியின் 14 கடைகள் குத்தகைக்கு வழங்கும் போது ஒப்பந்தம் கைச்சாத்திடாதது மற்றுமின்றி ரூபா.11,150,000 கீ மணி (key money) அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையின் பொதுச் சந்தை கடைகள் குத்தகைக்கு வழங்கும் போது 14 குத்தகைக்காரர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடை வாடகை ரூபா.1,966,800 மற்றும் தண்டப்பணம் ரூபா.214,795 வும் கூட்டுமொத்தம் ரூபா. 2,181,595 அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

3.4 <u>விளைவற்ற / குறைவாகப்பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்.</u>

சபையிற்குரிய இரண்டு கெப் வாகனம், டிரெக்டர் வாகனம் மற்றும் அதிர்வுறும் உருளை முறையாக 2015, 2010 மற்றும் 2014 வருடத்திலிருந்து பயன்படுத்தப்படாது பழைய சபைக் பூமியில் வைக்கப்பட்டுள்ளது.

3.5 <u>திண்மக் கழிவு முகாமைத்துவம்</u>.

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) கழிவு சேகரிக்கும் நிலையங்கள் 02 வாராந்த சந்தைப் பூமியிலும் மற்றும் தீகல்லவத்த பிரதேசத்தில் நடாத்திச் செல்லப்பட்ட போதிலும் நாளாந்தம் சேகரிக்கப்படும் கழிவுகளை பிரதேச சபை கட்டத்திட்கு அருகில் சேகரித்தன் காரணமாக நகர மக்கள் எதிர்ப்புத் தெரிவித்ததால் அந்த கழிவுகளை அகற்றவதற்காக ரூபா.2,792,400 வினை செலவு செய்திருந்தது.

(ஆ) 2016 ஒக்டோபர் மாதத்திலிருந்து கழிவு முகாமைத்துவத் திட்டமொன்று தீகல்லவத்த பிரதேசத்தில் நடாத்திச் செல்லப்படுவதுடன் மீள் சுழற்சி செய்ய முடியாத பிளாஸ்டிக் போன்ற பொருட்களை குழியொன்று வெட்டி அதனுல் போடப்பட்டிருந்தது.

4. <u>கணக்களிப்பொறுப்பும் நல்லாளுயையும்</u>

4.1 <u>நிதிக்கூற்றுக்கள் சமர்ப்ரித்தல்</u>

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மே 04 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 01 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

4.2 <u>பாதீட்டுக் கட்டுப்பாடு</u>

மீளாய்வாண்டிற்காக சமர்பிக்கப்பட்ட பாதீட்டில் செலவு விடயங்கள் 08 தொடர்பாக மொத்தம் ரூபா.2,517,000 நிதி ஒதிக்கீடு நூற்றுக்கு 100 வீதமும், செலவு விடயங்கள் 04 தொடர்பாக ரூபா.3,015,319 நிதி ஒதிக்கீடு நூற்றுக்கு 68 இருந்து 96 வரை பயன்படுத்தப்பட்டிருக்கலில்லை.

4.3 <u>உள்ளக கணக்காய்வு</u>

1988 இன் பிரதேச சபைகள் நிதி நிர்வாக விதிக் கோவையின் 5(7) இன் பிரகாரம் நிதி மற்றும் கயஞ்சியம் தொடர்பாக போதிய உள்ளக கணக்காய்வை நடாத்திச் செல்லப்பட்டிருக்கவில்லை.

5. <u>முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்</u>

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| <u>முறைமை</u> | <u>அவதானிக்க வேண்டிய விடயம்</u> |
|---|---|
| (அ) கணக்கீடு | (i) முற்பணக் கொடுப்பனவுப் பதிவேடு புதுப்பிக்கப்பட்டிருக்கவில்லை<br>(ii) தொங்கல் கணக்கில் நீண்ட காலமாக இருக்கும் மீதியினை தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. |
| (ஆ) வருமான நிர்வாகம் | (i) ஆதனவரி தொடர்காக சொத்து மதிப்பீடு சரியான முறையில் செய்யப்பட்டிருக்கவில்லை.<br>(ii) நிலுவை வருமானம் அறவிடப்பட்டிருக்கவில்லை. |

(iii) வியாபாரம் மற்றும் கைத் தொழில் தொடர்பாக வருடாந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(எ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(i) செலவு ஒதிக்கீட்டில் கவனம் செலுத்தக் கூடிய அளவில் ஒதிக்கீடுகள் மிகுதியாக இருந்தது.

(11) மதிப்பீட்டு வருமானம் அறவிடப்பட்டிருக்க வில்லை.

(ஏ) வாகன நிர்வாகம்

(i) நாளாந்த செலுத்தும் பதிவுப் புத்தகம் சம ர்ப்பிக்கப்படவில்லை.

(ii) வாகனங்களில் எரிபொருள் பரிசோதனை செய்யப்பட்டிருக்கவில்லை.